இணைப்பு II.

[240 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ் கலைக் களஞ்சியத்தின் முதல் பதிப்பு 10 பாகங்களாக 1969-70-ம் ஆண்டில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் தயாரிக்கப்பட்டு 3,000 படிகள் வெளியிடப்பட்டன. அந்த 3,000 படிகளும் தீர்ந்துபோயின. ஆகையால் 12 ஆண்டு காலத்தில் ரூபாய் 75 இலட்சம் செலவில் தமிழ் கலைக் களஞ்சியத்தின் இரண்டாம் பதிப்பைத் தயாரித்து 10,000 படிகள் அச்சிட்டு வெளியிட தமிழ் வளர்ச்சிக் கழகம் கருதியது. அரசாணை நிலை எண் 768, கல்வி, நாள் 4—4—1977-ல் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு இவ்வரசு மேற்படி பணி 4 ஆண்டுகளுக்குள் முடிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் முதற்கண் ரூபாய் 2 இலட்சம் மான்யம் வழங்கி ஆணையிட்டது. மேலும் ரூபாய் 3 இலட்சம் தமிழ் கலைக் களஞ்சியத்தை வெளியிட அரசு மான்யமாக அளித்தது. மொத்தம் ரூபாய் 5 இலட்சம் தமிழ் கலைக் களஞ்சியம் இரண்டாவது பதிப்பு வெளியிட மானியமாக அரசினால் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் அரசு இதற்கு அளிக்கவிருக்கும் நிதி உதவியைப்பற்றிய முடிவு தெரியாததால் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த இயலவில்லையெனக் கூறி கலைக் களஞ்சிய அலுவலகத்தைக் கலைத்து விட்டார்கள். இதன்மீது அலுவலர்கள் அரசுக்கு ஒரு முறையீடு அனுப்பினார்கள். தமிழ்க் கலைக் களஞ்சியம், தமிழ் வளர்ச்சிக் கழகம் மூலம் நடைபெறுவதால், இத்தனியார் நிறுவனத்தின் முடிவிற்கு அரசு பொறுப்பு ஆகாது.

ஆனாலும் தமிழ் வளர்ச்சியில் அரசு ஆர்வம் கொண்டிருப்பதால் இந்தக் கலைக் களஞ்சிய இரண்டாவது பதிப்பை வெளியிடும் திட்டத்தினை எந்த முறையில் செயல்படுத்தலாம் என்று அரசு ஆய்ந்து கீழ்க்கண்ட முடிவுகளை எடுத்துள்ளது.

(1) தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் இவ்வெளியீட்டு வேலையைக் கவனிக்கும்.

(2) இலக்கிய உலகின் பலதரப்பட்ட பிரிவினரை அங்கத்தினர்களாகக் கொண்ட ஒரு உயர்மட்டத் தொகுப்பாளர் குழு அமைத்து அரசு இவ்வேலையை மேற்பார்த்து வழி நடத்தும்.

(3) இவ்வேலையைச் செய்ய ஒரு முதன்மைத் தொகுப்பாளர், இரு இணைத் தொகுப்பாளர்கள் மற்றும் நான்கு உதவித் தொகுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கக் குழுவிற்கு அதிகாரமளித்துத் தேவையான உதவிப் பணியாளர்களை தமிழ் வளர்ச்சிக் கழகத்திலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டவர்களிலிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ அமர்த்தப்படுவர்.

(4) திட்டக் கணக்கைச் சரிவர வைக்கவும் அலுவலகத்தைக் கவனிக்கவுமாக ஒரு நிர்வாக மற்றும் கணக்கு அலுவலராக ஒரு முதுநிலை கணக்கு அலுவலரை மாற்றுப் பணியில் பணியமர்த்தம் செய்யவும், தக்க மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது. வேலையிழந்த கலைக் களஞ்சிய ஊழியர்களை, தேவைக்கேற்பவும், தகுதிக்கேற்பவும், அரசு இத் திட்டத்தை செயல்படுத்தும்போது வேலைக்கு எடுத்துக்கொள்ள முயற்சி செய்யும்.

இரண்டாம் பதிப்பை வெளிக்கொண்டு வருவதற்கு ஏற்கனவே தமிழ் வளர்ச்சிக் கழகம் தயார் செய்துள்ள கைப்பிரதிகள், மற்றும் பிளாக்குகள் போன்றவைகளை அரசு எடுத்துக்கொள்ள அரசு நியமித்துள்ள கல்வித் துறை அதிகாரி தமிழ் வளர்ச்சிக் கழகத்துடன் தொடர்பு கொண்டு இப்பணியை முடிக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இணைப்பு III.

[247 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 12 OF 1981
(As passed by the Assembly.)

A Bill to abolish the posts of part-time Village Officers in the State of Tamil Nadu.

WHEREAS the State Government are of the opinion that the system of part-time Village Officers is out-moded and does not fit in with the modern needs of village administration;

AND WHEREAS the State Government have, after careful consideration, taken a policy decision to abolish all the posts of part-time Village Officers on grounds of administrative necessity and to introduce a system of whole-time officers to be in charge of village administration;